செய்தி வெளியீடு எண்:590 நாள் : 23.11.2015

## செய்தி வெளியீடு

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கிய பின் கடந்த நவம்பர் 8-ஆம் தேதி முதல் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து பெய்த கடும் மழையின் காரணமாக பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டதைக் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 500 கோடி ரூபாய் ஒதுக்கி ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடி நிவாரணம் வழங்கப்படுவதுடன் வெள்ளச் சீரமைப்புப் பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளச் சேத நிவாரணம் மற்றும் சீரமைப்புகளுக்கான தேவை முதற்கட்டமாக 8,481 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை மாநில அரசுக்கு

வழங்கப்படவேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை இன்று கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும், நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக உடனடியாக 2,000 கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்றும், பாரதப் பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கடிதமும், வெள்ளச் சேத அறிக்கையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அலுவலகத்தில் இன்று காலை அளிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கடிதத்தின் அடிப்படையில், மத்திய அரசு உடனடி நிதி உதவியாக 939.63 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசுக்கு விடுவித்து உத்தரவிட்டுள்ளது. மேலும், வெள்ளச் சேதத்தை முழுமையாக மதிப்பீடு செய்து கூடுதல் நிதியுதவியை பரிந்துரைக்க விரைவில் மத்திய ஆய்வுக் குழுவையும் தமிழகத்திற்கு அனுப்புவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

* * * * *

வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
நாள்:- 23.11.2015.